# உண்மைத் தாள் குடிவரவுத் திருத்தச் சட்டம் 2024 (பொதுநலவாயம்) மற்றும் குடிவரவுத் திருத்தம் (அகற்றுதல் மற்றும் பிற நடவடிக்கைகள்) சட்டம் 2024 (பொதுநலவாயம்)

ASRC
Asylum Seeker Resource Centre

நவம்பர் 29, 2024 அன்று அரசாங்கம் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தியது, ஆஸ்திரேலியாவிலிருந்து மக்களை வெளியேற்றுவதற்கும், முந்தைய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டதைப் பெரிய குழுவிற்கான பாதுகாப்பு நிலையை இரத்து செய்தல், முழு நாடுகளையும் தடை செய்ததாக நியமிப்பதற்கும், அமைச்சருக்குப் புதிய சட்டங்கள் மேலும் அதிகாரத்தை வழங்கும், இதனால் வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, தடைசெய்யப்பட்ட நாட்டின் குடிமக்கள் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைவதற்கு விசா பெறுவது பெரிதும் சாத்தியமில்லை.

இந்த உண்மைத் தாள், நவம்பர் 29, 2024 அன்று நிறைவேற்றப்பட்ட குடிவரவுத் திருத்தம் *(குடிவரவத் தடுப்புச் சட்டத்தில் தடைசெய்யப்பட்ட பொருட்கள்) சட்டம் 2024* (பொதுநலவாயம்) பற்றிக் குறிப்பிடவில்லை. எங்கள் மற்றைய தகவல் தாளைப் பார்க்கவும்.

## புதிய சட்டங்களின் கண்ணோட்டம்

- அரசாங்கம் வெளிநாடுகளுடன் "மூன்றாம் நாட்டு வரவேற்பு ஏற்பாடுகளில்" ஈடுபட அனுமதிக்கிறது.[1] வெளியேற்றத்தை எதிர்கொள்வதாகக் கருதப்படும் எந்தவொரு நபரும் மூன்றாவது நாட்டிற்கு (அவர்களின் சொந்த நாட்டைத் தவிர வேறு இடத்திற்கு) அனுப்பப்படலாம். தற்போது எந்த நாடுகள் பரிசீலிக்கப்படுகின்றன அல்லது அத்தகைய ஏற்பாடுகள் எப்போது தொடங்கும் என்பது எங்களுக்குத் தெரியாது.
- ஆஸ்திரேலியாவிலிருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு வசதிசெய்ய ஒருவருக்குக் கடிதம் எழுத அமைச்சரை அனுமதிக்கிறது.[4] இதில் கடவுச்சீட்டு அல்லது பிற பயண ஆவணத்திற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய அவர்களை வழிநடத்துதல், ஒரு அதிகாரி அல்லது பிற நபருடன் ஒரு நேர்காணல் அல்லது சந்திப்பில் கலந்துகொள்வது மற்றும் வழிநடத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு அதிகாரி/நபருக்கு ஆவணங்கள் அல்லது தகவல்களை வழங்குதல் ஆகியவை அடங்கும்.

  தம்மை அகற்றுவதற்கு ஒத்துழைக்காத ஒருவர் தடுப்புக்காவல் மற்றும் குற்றவியல் தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடும் - குறைந்தபட்சம் 12 மாதங்கள் கட்டாய சிறைத்தண்டனையுடன் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.[5]



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

- BVR இல் உள்ளவர்களுக்கு ஊரடங்கு உத்தரவு மற்றும் கணுக்கால் கண்காணிப்புக் கருவி நிபந்தனைகளை விதிக்க ஒரு புதிய மதிப்பீட்டை அறிமுகப்படுத்துகிறது.[7]
- சில நாடுகளைச் சேர்ந்தவர்கள் (எந்த நாடுகள் என்று எங்களுக்கு இன்னும் தெரியவில்லை) ஆஸ்திரேலியாவிற்குள் நுழைவதைத் தடுக்க அமைச்சரை அனுமதிக்கிறது[8]

புதிய சட்டங்கள் அரசாங்கம் இந்த நடவடிக்கைகளை எடுக்க அனுமதிக்கும் அதே வேளையில், அது செயல்படுமா என்பது இன்னும் தெரியவில்லை.

## இது எனக்கு என்ன விளைவுகளைக் கொண்டுவரும்?

அரசாங்கத்திடமிருந்து அகற்றல் அல்லது தடுப்புக்காவல் குறித்து ஏதேனும் அழைப்புகள் அல்லது கடிதங்களைப் பெற்றால், உடனடியாக ஒரு வழக்கறிஞரைத் தொடர்புகொள்வது மிகவும் முக்கியமாகும். இலவச சட்ட உதவிக்குக் கீழே உள்ள தொடர்புகளைப் பார்க்கவும்.

## நீங்கள் ஆஸ்திரேலிய நிரந்தர விசாவை வைத்திருந்தால்

உங்கள் நிரந்தர விசா இரத்துச் செய்யப்படாவிட்டால், இந்தப் புதிய சட்டங்களால் நீங்கள் பாதிக்கப்பட வாய்ப்பில்லை. இருப்பினும், உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவர் தடைசெய்யப்பட்ட நாட்டைச் சேர்ந்தவராக இருந்தால், ஆஸ்திரேலியாவில் உங்களைச் சந்திக்க அவர்களுக்கு சுற்றுலா விசா வழங்கப்படாமல் போகலாம். மேலும் தகவலுக்குக் கீழே காண்க.

## நீங்கள் குடிவரவு தடுப்புக்காவலில் இருந்தால்

- நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்கொள்ளும் குடிவரவுத் தடுப்புக்காவலில் இருந்தால், ஆஸ்திரேலியாவிலிருந்து உங்களை வெளியேற்றுவதற்கு ஒத்துழைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சரால் எழுத்துமூல உத்தரவு உங்களுக்கு அனுப்பப்படலாம். முன்னர் கூறியது போல், இதில் கடவுச்சீட்டு அல்லது பயண ஆவணத்திற்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புதல், உங்கள் அகற்றல் குறித்து ஆராயஅரசாங்கத்திற்குத் தேவையான ஆவணங்கள் (உதாரணமாக, உங்கள் அடையாளம் பற்றி) அல்லது தகவல்களை வழங்குதல் மற்றும் உங்கள் அகற்றலுக்குத் தேவையான சந்திப்புகளில் கலந்துகொள்வது ஆகியவை அடங்கும்.
- புதிய சட்டங்களின் விளைவாக, உங்களை எப்படி, எங்கு அகற்றுவது (உதாரணமாக: பாதுகாப்புசார் கண்டுபிடிப்புகள் காரணமாக உங்கள் சொந்த நாட்டிற்கு அழைத்துச் செல்ல முடியாவிட்டால்) என்பதை அரசாங்கம் விசாரிக்கும் வரை உங்களைத் தடுப்புக்காவலில் வைத்திருப்பது சட்டப்பூர்வமாக இருக்கலாம்.
- நீங்கள் இன்னும் நீதிமன்ற முடிவுக்காகக் காத்திருந்தாலும், சட்டத்தின்படி, அகற்றும் செயல்முறை இனிமேலும் தொடங்கலாம்,



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

இருப்பினும், நீதிமன்ற வழக்கு இன்னும் தீர்மானிக்கப்படாத வரை அகற்றுதல் நடைபெறாது என்று கடந்த கால அனுபவம் நமக்குக் கூறுகிறது.

### நீங்கள் Bridging Visa R (பிரிட்ஜிங் விசா ஆர்) இல் சமூகத்தில் இருந்தால்

- நீங்கள் பிரிட்ஜிங் விசா **R** இல் சமூகத்தில் இருந்தால், உங்களை மூன்றாம் நாட்டிற்கு அனுப்ப முடியுமாக இருந்தால், உங்கள் விசா முடிவடையும் .[9] இந்தக் காரணத்திற்காக நீங்கள் மீண்டும் தடுத்து வைக்கப்படுவதையும் எதிர்கொள்ள நேரிடும். இந்தக் கட்டத்தில், எந்த மூன்றாம் நாடுகள் பரிசீலிக்கப்படுகின்றன என்றோ மக்கள் அகற்றப்படுவார்களா என்றோ எங்களுக்குத் தெரியாது.

தயவுசெய்து கவனிக்கவும், நீங்கள் ஒரு செல்லுபடியாகும் பாதுகாப்புக்கான விசாவிற்கு விண்ணப்பித்திருந்தால் அது இன்னமும் தீர்மானிக்கப்பட்டு இறுதிப்படுத்தப்படவில்லை எனில், உங்களை அகற்ற முடியாது.

### நீங்கள் Bridging Visa E (பிரிட்ஜிங் விசா ஈ) இல் சமூகத்தில் இருந்தால்

- நீங்கள் ஒரு அமைச்சக தலையீட்டு கோரிக்கையை தாக்கல் செய்ததன் அடிப்படையில் அல்லது புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ததன் அடிப்படையில் நீங்கள் பிரிட்ஜிங் விசா E ஒன்றினை வைத்திருந்தால், நீங்கள் உங்கள் சொந்த நாட்டிற்கு அல்லது மூன்றாம் நாட்டிற்கு வெளியேற்றப்படலாம்.

- உங்களுக்குப் பாதுகாப்புக்கான தகுதியொன்று இருந்து, உங்கள் சொந்த நாட்டிற்கு அகற்றப்பட முடியாவிட்டால், உங்களுக்கு இனிப் பாதுகாப்புத் தேவையில்லை என்று அமைச்சர் முடிவு செய்யலாம். இந்த முடிவை நிர்வாக மறுஆய்வு தீர்ப்பாயத்தில் (Administrative Review Tribunal) மறுஆய்வு செய்ய நீங்கள் உரிமை பெறுவீர்கள். தயவுசெய்து கவனிக்கவும், உங்களை மூன்றாவது நாட்டிற்கு அனுப்புவது இதன்பின்னரும் சாத்தியமாகலாம், இருப்பினும், இந்த கட்டத்தில் மூன்றாம் நாட்டு ஒப்பந்தங்கள் குறித்துத் தெரியவில்லை.

- நீங்கள் ஒரு அமைச்சகத் தலையீட்டு கோரிக்கையைத் தாக்கல் செய்திருந்தால், அமைச்சர் உங்கள் கோரிக்கையைப் பரிசீலிக்க முடிவு செய்தால், உங்களை நீக்கும் கடமை **6** மாதங்களுக்கு அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றொரு தேதி வரை தற்காலிகமாக நிறுத்தப்படும்.[11] [13]

  இந்தக் காலகட்டத்தில், உங்களை ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்ற முடியாது, இருப்பினும், ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு உங்களைத் தயார்படுத்தும் பிற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை இது தடுக்காது.[12] உதாரணமாக,



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

அரசாங்கம் உங்கள் சார்பாக ஒரு பயண ஆவணத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

- நீங்கள் நீதித்துறை மறுஆய்வுவழக்கின் அடிப்படையில் பிரிட்ஜிங் விசா E வைத்திருந்தால், இந்தப் புதிய சட்டங்களால் நீங்கள் பாதிக்கப்பட வாய்ப்பில்லை. இருப்பினும், அகற்றல் அல்லது தடுப்புக்காவல் குறித்து உள்நாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் (Department of Home Affairs) இருந்து அழைப்புகள் அல்லது கடிதங்கள் உங்களுக்கு வந்தால், தயவுசெய்து ஒரு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ளவும்.

## நீங்கள் ஒர் இடைத்தங்கல் நபராக ( transitory person) இருந்தால்

நீங்கள் ஒர் இடைத்தங்கல் நபராகஇருந்தால், உதாரணமாக மருத்துவ சிகிச்சைக்காக PNG அல்லது நவுருவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு மாற்றப்பட்டிருந்தால், அரசாங்கம் உங்களை மூன்றாவது நாட்டிற்கு அகற்ற நடவடிக்கை எடுக்கலாம்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்த நேரத்தில், அரசாங்கம் எந்த வெளிநாடுகளுடன் ஏற்பாடுகளைச் செய்ய யோசித்து வருகிறது என்பது எங்களுக்குத் தெரியாது, மேலும் இது எப்போது நிகழக்கூடும் என்பதற்கான காலக்கெடு எங்களிடம் இல்லை.

## இது வெளிநாட்டில் உள்ள எனது குடும்பத்திற்கு என்ன விளைவுகளைக் கொண்டுவரும்?

இந்த நேரத்தில், அரசாங்கம் எந்த நாடுகளை நுழைவுத் தடையில் சேர்க்கும் அல்லது எந்தத் தடையும் எப்போது தொடங்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. உங்கள் குடும்பம் தடைசெய்யப்பட்ட நாட்டைச் சேர்ந்ததாக இருந்தால், அவர்கள் ஆஸ்திரேலியாவில் உங்களைச் சந்திக்க முடியாமல் போகலாம்.

தடைசெய்யப்பட்ட நாட்டின் குடிமகன் விசா விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தால், அது செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.[18] செல்லுபடியற்ற விண்ணப்பதாரர்கள் "தடைசெய்யப்பட்ட" நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தடையை நீக்கி, விசா விண்ணப்பத்தை மீண்டும் தாக்கல் செய்யும் வாய்ப்பை வழங்கும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு.

பின்வரும் நிபந்தனைகளின் கீழ் விசாவிற்கு விண்ணப்பிக்கும் நபர் இருந்தால் நுழைவுத் தடை பொருந்தாது:

- இரட்டை குடிமகனாக இருந்தால் (தடைசெய்யப்பட்ட நாட்டிற்கு மேலதிகமாக மற்றொரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றிருந்தால்);



சட்ட சார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

- ஆஸ்திரேலிய குடிமகன், நிரந்தர விசா வைத்திருப்பவர் அல்லது ஆஸ்திரேலியாவில் வழக்கமாக வசிக்கும் நபரின் வாழ்க்கைத் துணை, நடைமுறைத் துணைவர் (de facto partner) அல்லது சார்ந்திருக்கும் குழந்தை;
- ஆஸ்திரேலியாவில் உள்ள 18 வயதுக்குட்பட்ட குழந்தையின் பெற்றோராக இருப்பது; அல்லது
- அகதிகள் மற்றும் மனிதாபிமான (வகுப்பு XB) விசாவிற்கு விண்ணப்பிக்கிறார்.

## சட்ட உதவியை நான் எங்கே பெறலாம்?

நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கும் மற்றும் நற்பெயர் பெற்றவர்களிடம் மற்றும் இடங்களிலிருந்து ஆலோசனை பெறுவது முக்கியம். நீங்கள் இலவச சட்ட உதவிக்காக கீழே உள்ள நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளலாம், டிசம்பர் மாத இறுதியில் மற்றும் ஜனவரி மாத தொடக்கத்தில் நிறுவனங்களுக்கு குறைந்த வளங்கள் மட்டுமே இருக்கும் என்பதால், ஒரு வழக்கறிஞருடன் பேசப் புத்தாண்டு வரை காத்திருக்க வேண்டியிருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| நிறுவனம் | அவர்கள் எவருக்கு உதவ முடியும்? | தொடர்பு விபரங்கள் |
|---|---|---|
| புகலிடம் கோருவோர் வள மையம் | நீங்கள்:<br>• ஆஸ்திரேலியாவில் ஒரு குடிவரவுத் தடுப்பில் உள்ளீர்கள்; அல்லது<br>• விக்டோரியாவில் உள்ள சமூகத்தில் வசிக்கிறீர்கள்; அல்லது • அண்மையில் குயின்ஸ்லாந்தில் அல்லது மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள தடுப்புக்காவலில் இருந்து சமூகத்தில் விடுவிக்கப்பட்டனர் அல்லது மற்றும்<br>• பிறந்த நாட்டிற்குத் மீண்டும் செல்லும்போது தீங்கு ஏற்படும் என்ற அச்சம் கொண்டவர். | மின்னஞ்சல்: legal@asrc.org.au. தடுப்புக்காவலில் உள்ளவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளில், மின்னஞ்சல் கோரிக்கைகளுக்கு மட்டுமே நாங்கள் பதிலளிப்போம் என்பதை நினைவில் கொள்க.<br><br>தொலைபேசி அல்லது நேரில் வருகை தரல்:<br>• நேரம்: திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி காலை 10 மணி முதல் மதியம் 12.30 மணி வரை (புதன்கிழமைகளில் மூடப்படும்) • தொலைபேசி: (03) 9274 9889<br>• முகவரி: 214-218 Nicholson Street, Footscray VIC 3011 |



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

| | | |
|---|---|---|
| Legal Aid (லீகல் எய்ட்) NSW | நீங்கள்:<br>• நியூ சவுத் வேல்ஸில் (தடுப்புக்காவல் அல்லது சமூகத்தில்) உள்ளீர்கள்; அல்லது<br>• தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளீர்கள், மற்றும் தடுத்து வைக்கப்படுவதற்கு முன்பு நியூ சவுத் வேல்ஸில் வசித்து வந்தீர்கள். | தொலைபேசி: (02) 9219 5790 |
| அகதிகள் ஆலோசனை விடய மேலாண்மை சேவை (RACS) | நீங்கள்:<br>• நியூ சவுத் வேல்ஸ் அல்லது நார்தேன் டெரிடெரியில் இல் சமூகத்தில் வசிக்கிறீர்கள்; அல்லது<br>• யோங்கா ஹில் குடிவரவு தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளீர்கள். | மின்னஞ்சல்: admin@racs.org.au |
| Refugee Legal | நீங்கள்:<br>• ஒரு குடிவரவுத் தடுப்பில் உள்ளீர்கள்; அல்லது<br>• விக்டோரியா, தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் நார்தேன் டெரிடெரியில் சமூகத்தில் வசிக்கிறீர்கள். | மின்னஞ்சல்: admin@refugeelegal.org.au |

## வேறு எங்கிருந்து எனக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும்?

அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் சேவை வழங்குநர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக வீட்டுவசதி ஏற்பாடு செய்தல் மற்றும் மெடிகேர் (சுகாதாரப் பராமரிப்பை அணுக) மற்றும் சென்ட்ரெலிங்கிற்கு விண்ணப்பிக்க உதவுதல் உள்ளிட்ட வரையறுக்கப்பட்ட ஆதரவை வழங்குகிறார்கள். நீங்கள் குறுகிய கால SRSS (நிலைத் தீர்மான ஆதரவு சேவைகள்) பெறவும் தகுதி பெறுவீர்கள்.

கீழே உள்ள சேவை வழங்குநர்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் என்ன உதவிகளை வழங்க இயலும் என்பதை அறியலாம்.

உங்களுக்கு ஏற்கனவே ஒரு விடைய மேலாளர் (caseworker) இருந்தால், ஏற்கனவே வழங்கப்பட்ட தொடர்பு விபரங்களில் அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளப் பரிந்துரைக்கப்படுகிறது.



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

| நிறுவனம் | தொடர்பு விபரங்கள் |
| --- | --- |
| Life Without Barriers | மின்னஞ்சல்: info@lwb.org.au<br>தொலைபேசி:<br>• சன்ஷைன் (VIC) அலுவலகம்: (03) 9245 2701<br>• டான்டெனாங் (VIC) அலுவலகம்: (03) 8752 8500<br>• அவசரநிலைகளுக்கு வேலை நேரத்திற்குப் பிறகு (மாலை 5 மணி முதல் காலை 9 மணி வரை): 1800 861 862 |
| Settlement Services International (SSI) | அஞ்சல்: srss.intake@ssi.org.au<br>தொலைபேசி:<br>• திங்கள் முதல் வெள்ளி வரை: (02) 9685 0100<br>• அவசரநிலைகளுக்கு வேலை நேரத்திற்குப் பிறகு (வார நாட்களில் மாலை 5 மணி முதல் காலை 9 மணி வரை & வார இறுதி நாட்கள்): (02) 1800 774 142 |
| Lifeline | தொலைபேசி: 13 11 14 (24 மணிநேரமும், வாரத்தில் 7 நாட்களும் );<br>இணையவழி அரட்டை/குறுஞ்செய்தி:<br>https://www.lifeline.org.au/ |
| Beyond Blue | தொலைபேசி: 1300 22 4636 (24 மணிநேரமும், வாரத்தில் 7 நாட்களும் )<br>இணையவழி அரட்டை:<br>https://www.beyondblue.org.au/get-support/talk-to-a-counsellor/chat |

---

[1] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 198AHB.

[2] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197D.

[3] "குடிமக்கள் அல்லாதவர்களை அகற்றும் வழித்தடம்" என்பது, குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்) இன் பிரிவு 5(1) இல் வரையறுக்கப்பட்ட ஒரு புதிய சொற்றொடர்.

[4] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 199C.

[5] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 199E.

[6] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 199E(4).

[7] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 76E(4)(b).

[8] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 199F, 199G.

[9] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 76AAA.

[10] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E (1),(2). 198 இனையும் காண்க

[11] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E (5).



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**

[12] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E (10).

[13] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E (6)(a).

[14] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E.

[15] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E.

[16] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E.

[17] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 197E (6)(a).

[18] குடிவரவுச் சட்டம் *1958* (பொதுநலவாயம்), s 199G(1).

பொறுப்புத்துறப்பு: இந்த உண்மைத் தாள் ஜூலை 2024 அன்று உள்ள சட்டத்தின்படி , ஆஸ்திரேலிய நாட்டு எல்லையுள், பாதுகாப்பு விசா விண்ணப்ப செயல்முறை மூலம் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருபவர்களுக்கு பொதுவான தகவல்களை வழங்குகிறது. இந்த உண்மைத் தாள் சட்ட ஆலோசனை அல்ல. உங்கள் குடிவரவு விடயம் குறித்த முடிவுகளை எடுக்க இந்த உண்மைத் தாளை சார்ந்து இருக்கக்கூடாது. தகுதிவாய்ந்த சட்ட நிபுணர் அல்லது பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவரிடம் இருந்து சுயாதீனமான ஆலோசனையைப் பெறுமாறு நாங்கள் உறுதியாகப் பரிந்துரைக்கிறோம். தகவலுக்குத் தயவுசெய்து பார்வையிடவும்: https://www.mara.gov.au.

**தேதி: டிசம்பர் 2024**



சட்டசார் பொறுப்புத்துறப்பு: இந்தப் படிவத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களே தவிர, சட்ட ஆலோசனையாகவோ அல்லது குடிவரவு ஆலோசனையாகவோ இருக்காது.
கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: **டிசம்பர் 2024**